பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 22 (4—5—58) சனி ★ வெளியூர்: சித்திரை 23 (5—5—68) ஞாயிறு [இதழ்: 268

கட்சி மாறிகள் 220 பேர்!

115 பேர் அமைச்சர்கள்!

புதுடில்லி, மே 4—

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு 220 சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறியிருக்கின்றனர்!

இத்தகவலை, மக்களவையில், உள் விவகாரத் துறைத் துணையமைச்சர் வி.சி. சுக்லா தெரிவித்தார்.

இந்த 220 பேரில் 115 பேர் அமைச்சர்களாகவும் துணை அமைச்சர்களாகவும் இருக்கின்றனர்.

எல்லையில் கண்காணிப்பு

பாகிஸ்தான் ஊடுருவலைத் தடுக்க ஏற்பாடு

புதுடில்லி, மே 3—

"பாகிஸ்தானிலிருந்து இந்திய எல்லைக்குள் படைபலம் கொண்டு ஊடுருவல், எதுவும் நேரிடுவதைத் தடுக்கும் வகையில், கட்ச்—அசாம்—திரிபுரா எல்லைகளில் மிகவும் நுணுக்கமான கண்காணிப்பை அரசு மேற்கொண்டுள்ளது"

என்று, உள்துறை அமைச்சர் திரு. சவாண், நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அழுக்காற்றால் புலம்புகிறார் சுப்பிரமணியம்!

சென்னை, மே 4—

"அறிஞர் அண்ணா அவர்களின் அமெரிக்கப் பயணத்தைப் பற்றி இங்குள்ள சுப்பிரமணியம் கேலி பேசுகிறார். ஆனால் அண்ணா அவர்கள், உலகில் உள்ள பெருந்தலைவர்களெல்லாம் புகழும் வண்ணம் பயணம் செய்துவருகிறார்!

"அவருடைய அறிவுக்கு உலகம் மதிப்பளிக்கிறது. இதைக் கண்டு பொறாமைப்படுவதில் பயன் என்ன?

"அண்ணா யார் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் அவருடைய ஆற்றல்—அறிவு—திறமை எல்லாம் புரியும். இந்த உலகில் வேறு எவரும் சாதிக்கமுடியாததை அண்ணா சாதித்திருக்கிறார்!

"மாற்றுக் கருத்துக் கொண்ட எல்லாத் தலைவர்களையும் ஓரணியில் கொண்டுவந்து சேர்த்தார் அண்ணா; ஆகவே, எந்த வகையிலும்--எத்தகைய பிரசாரத்தாலும் கழகத்தையோ, கழக அரசையோ அசைக்க முடியாது!

"அதே நேரத்தில், 'தமிழர் ஆட்சி வந்துவிட்டது' என்று கழகத் தோழர்கள் வாளாவிருந்து விடக்கூடாது; அரசின் சாதனைகளை—பணிகளை மக்களுக்கு எடுத்துக் கூறி, எதிர்ப்புக்களையெல்லாம் தவிடுபொடியாக்கி, ஆட்சிக்குப் பேராதரவு திரட்ட வேண்டும்."

--அமைச்சர் முத்துசாமி

(சென்னை 72-வது வட்டப் பொதுக் கூட்டத்தில்)

கிழக்கு ஜெர்மனியை அங்கீகரிக்க வேண்டும்

செ. கந்தப்பன் வற்புறுத்தல்

புதுடில்லி, மே 4—

"ஜெர்மன் சனநாயகக் குடியரசு (கிழக்கு ஜெர்மனி) நிலையான — சுதந்தரமான ஒரு தனி நாடு; அதை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன் வற்புறுத்தினார்.

லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் அண்ணா

'டிஸ்னி உலகு' சென்றார் -- வியப்பூட்டும் காட்சிகளைக் கண்டு களித்தார் அண்ணா

லாஸ் ஏஞ்சல்ஸ், மே 4—

கடந்த வியாழனன்று அண்ணா அவர்கள், 'டிஸ்னி உலகு' சென்று, அங்குள்ள புகழ்பெற்ற கேளிக்கைப் பூங்கா, கடல்வாழ் உயிரினங்கள் காட்சிசாலை முதலியவற்றைப் பார்வையிட்டார். அன்று இரவே சான்பிரான்சிஸ்கோ சென்றார்.

கான்சாஸ் நகரிலிருந்து அமெரிக்க மேல் கரையிலுள்ள லாஸ் ஏஞ்சலஸ் நகருக்கு அவர் பறந்து வந்தார் வழியில் மாபெரும் அமெரிக்கப் பாலைவனத்தையும், பனி முடிய ராக்கி மலைகளையும் அவர், விமானத்திலிருந்தே பார்வையிட்டார்.

இன்று (மே 4) அண்ணா அவர்களின் அமெரிக்கப் பயணம் முடிவடைகிறது; அதற்கு முன்பு சான் பிரான்சிஸ்கோ, ஹானலூலு ஆகிய நகரங்களில் அவர், ஒவ்வொரு நாள் தங்குகிறார்.

தென்னக மாணவர்கள் நல்வரவு கூறினர்

கல்விநிலையங்களைக் கண்டார்-- மாணவருடன் அளவளாவினார்

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், இந்நகரில் ஒருநாள் தங்கினார். இந்திய மாணவர்களைச் சந்தித்தார்; கல்வி நிலையங்களைப் பார்வையிட்டார்; ஊர் சுற்றிப் பார்த்தார்.

புதன்கிழமை இரவு அவர் இங்கு வந்து சேர்ந்தபோது அவரை வரவேற்க விமான நிலையத்தில் ஏராளமான மாணவர்கள் திரண்டிருந்தனர். மாணவர்களில் பெரும்பாலோர் தமிழ் நாட்டையும் தென்னிந்திய மாநிலங்களையும் சேர்ந்தவர்கள்.

விமான நிலையத்தின் முகப்பு அறைக்கு முதல்வர் வந்ததும் மாணவர் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவருக்கு நல்வரவு கூறினர்; ஏராளமான மாலைகள் அணிவிக்கப் பெற்றன; அவருடன் நின்று படமெடுத்துக் கொண்டனர்.

முதலமைச்சர், பின்னர், ஹாலிவு - அருகிலுள்ள தமது ஓட்டலுக்குச் சென்றார். நெடுநேரம் இந்தியமாணவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

முட்டுக்கட்டை நீங்கியது!

சமாதானப் பேச்சு பாரிசில் துவங்கும்

வியட்நாம் -- அமெரிக்கா முடிவு

வாஷிங்டன், மே 4—

அடுத்த வெள்ளிக்கிழமையன்று பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசில் பேச்சுவார்த்தைகளைத் துவங்குவதென அமெரிக்காவும்—வட வியட்நாமும் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை எந்த நாட்டில் துவங்குவதென கடந்த ஒரு திங்களாக இரு நாடுகளுக்குமிடையே நிலவி வந்த முட்டுக்கடடை இதன் மூலம் நீங்கிவிட்டது.

மே 10-ம் நாளோ அதற்குப்பல நாட்களுக்குப் பின்னரோ, பாரிசில் அமெரிக்காவைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக ஹனாய் தெரிவித்த யோசனையைத் தாம் ஏற்றுக்கொண்டுவிட்டதாக அதிபர் ஜான்சன் தெரிவித்தார்.

ஆனால், ஓர் எச்சரிக்கையும்விட விரும்புவதாக அவர் கூறினார்; 'இது, முதல் படிதான்; இன்னும் பல சங்கடங்களும் தொல்லைகளும் எதிர்நோக்கியுள்ளன' என்றார்.

அ.பொ. அரசுமீது காங்கிரசுக்காரர் தொடர்த்த வழக்கு

தள்ளுபடி செய்யப்பட்டது

சென்னை, மே 4—

முன்னாள் மேயரும், கழகச் சட்டமன்ற உறுப்பினருமான திரு. அ. பொ. அரசு மீது, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திருமதி சரசுவதி பாண்டுரங்கம் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

திருமதி சரசுவதி பாண்டுரங்கத்துக்குச் சொந்தம் எனக் கூறப்படும் வாழைத் தோட்டம் அழிக்கப்பட்டதாகக் கூறி, அது தொடர்பாகத் திரு. அரசு மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது

இவ்வழக்கை, விசாரித்த சைதாப்பேட்டை தனி இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட், தள்ளுபடி செய்து தீர்ப்புக் கூறினார்.

அன்பிருந்தால் நினைத்ததைமுடிக்கும் ஆற்றல் பிறக்கிறது!

நிர்வாகியே பணியாளராக மாறினார்!

அண்ணா கேட்டார் --- எங்கிருந்தோ வாங்கி வந்து உண்ணச்செய்து உளம் மகிழ்ந்தார்

மன்ஹாட்டன் (கான்சாஸ்), மே 2—

விருந்தோம்பலுக்குப் புகழ்பெற்றது, அமெரிக்க மத்திய மேற்குப் பகுதி. இதை நேரில் அறியும் சில வாய்ப்புக்கள் அண்ணா அவர்களுக்குக் கிட்டியது.

கான்சாஸ் அரசுப் பல்கலைக் கழக வளைவுக்கு அருகிலுள்ள 'விடுமுறை விடுதி; என்னும் ஓர் ஓட்டலில் அவர் தங்கினார்.

இன்று பிற்பகலில் அண்ணா அவர்கள் அங்கு போனபோது, உணவு நிலையத்தின் மாடி முகப்பில், 'தமிழக முதலமைச்சருக்கு நல்வரவு' என்று பெரிய எழுத்துக்களில் எழுதியிருக்கக் கண்டார்; ஓட்டல் நிர்வாகி இதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இரவில் முதல்வர் இங்கு திரும்பிவரும்போது, ஒளி விளக்கு எழுத்துக்கள் அவருக்கு நல்வரவு கூறிக்கொண்டிருந்தன.

ஓட்டல் நிர்வாகி மற்றொருவிதத்திலும் மரியாதை காட்டினார். புதன் கிழமை பிற்பகலில் விடுதிக்கு வந்ததும், 'காப்பியும், உருளைக் கிழங்கு வறுவலும் வேண்டும்' என்று அண்ணா அவர்கள் கேட்டார்.

வறுவல் அங்கு இல்லை; ஆனால் சில நிமிடங்களில், வறுவலும், ஆவி பறக்கும் காப்பியும் வந்து சேர்ந்தன.

ஆம்; விடுதி நிர்வாகி பணியாளராக மாறி, எங்கிருந்தோ நொடியில் 'வறுவல்' வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தார்.

அன்பிருந்தால் நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பிறகும் என்பது உண்மையல்லவா?

பேச்சு சிறிது எனினும்- வியப்பில் ஆழ்த்தியது!

இந்திய மாணவர் அளித்த தேநீர் விருந்தில், அண்ணா பேசிய பேச்சு அனைவரையும் கவர்ந்தது!

பேச்சு சிறிதே எனினும், முதல்வரின் நகைச்சுவையும் நாவன்மையும் அமெரிக்கர் ஒருவரை வியப்புறச் செய்தன!

தமிழ் மாணவர் ஒருவரிடம் இது பற்றி அந்த அமெரிக்கர் குறிப்பிட்டபோது, இளைஞர் முறுவல் பூத்தவாறு கூறினார்:—

"இது, புகழ்ச்சியாக அமையாது என நினைக்கிறேன்; நாங்களும் இவ்வாறுதான் நினைக்கிறோம்; 'தமிழக ஜார்ஜ் பெர்னார்டு ஷா' என்று நாங்கள் குறிப்பிடுவதுண்டு"

ஆந்திரர் ஆர்வம்!

கான்சாஸ் அரசாங்கப் பல்கலைக் கழக இந்திய மாணவர் சங்கத் தலைவர் வி. தனஞ்சயராவ், ஓர் ஆந்திரர்; பத்திரிகைத் தொழிலில் எம்.ஏ. பட்டம் பெறுவதற்காகப் படித்துவருகிறார். அண்ணா அவர்களை வரவேற்றுப் பேசும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது; அவர் ஆங்கிலத்தில் வரவேற்றுப் பேசியபோதிலும், முதல் பெயர் வரும்போதெல்லாம், 'திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள்' என்று குறிப்பிட்டுத் தமது மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்; தமிழ்நாட்டின் பல துறை வளர்ச்சிகளை அவர் பாராட்டினார்.

மத்திய அமைச்சர்களின் ஓராண்டுச் செலவு!

புதுடில்லி, மே 3—

மத்திய அரசின் 'காபினட்' அமைச்சர் ஒருவரின் செக்ரடேரியட் வசதிகள் உட்பட ஓராண்டுச் செலவு ரூ. 1,12,704 ஆகியிருக்கிறது!

ஓர் இணை அமைச்சருக்கு ரூ. 74,904-ம், ஒரு துணையமைச்சருக்கு ரூ. 45,283-ம் ஆகியிருக்கிறது!

ஓர் அமைச்சரின் சராசரி பயணப்படி மட்டும் ஓராண்டுக்கு ரூ. 30,000 ஆகியிருக்கிறது.

இத்தகவலை, உள்துறை விவகாரத் துணையமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி தெரிவித்தார்.

பாகிஸ்தானிடம் சிக்கியுள்ள இந்திய சாதனங்கள்

விடுக்க நடவடிக்கை என்ன?

புதுடில்லி, மே 3—

"1965-ம் ஆண்டு நடந்த போரில் பாகிஸ்தான், சுமார் ரூ 30 இலட்சம் மதிப்புக்குத் தந்தி - தொலைபேசிச் சாதனங்களைக் கைப்பற்றிக்கொண்டது; இதுவரையில் அந்தச் சாதனங்களை விடுவிக்கவில்லை"

என்று, செய்திப் போக்குவரத்துத் துணையமைச்சர் ஐ. கே. குஜ்ரால், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

டில்லியில் நிறுவுவதற்காகத் தருவிக்கப்பட்ட 'கிராஸ் பார் எக்சேஞ்ச்' சாதனத்தை பாகிஸ்தான் அதிகாரிகள் இஸ்லாமாபாத்தில் பயன்படுத்திக் கொண்டிருப்பதாகவும், 1967 அக்டோபர் 31 வரை தந்தி--தொலைபேசிக் கட்டண வகையில் பாகிஸ்தான் ரூ. 64 இலட்சம் தர வேண்டியிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்கூறிய சாதனங்களை விடுவிப்பது பற்றி இந்திய அதிகாரிகள் பேச்சு நடத்தியதாகவும், இது பற்றிப் பேசத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும், உயர் மட்டத்தில் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய விவகாரம் இது என்றும் பாகிஸ்தான் அதிகாரிகள் கூறிவிட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

கட்சிகட்கு கம்பெனி நன்கொடை

தடுக்கும் மசோதா அடுத்தவாரம் வருகிறது

புதுடில்லி, மே 4—

அரசியல் கட்சிகளுக்கோ, அரசியல் நிறுவனங்களுக்கோ கம்பெனிகள் நன்கொடை வழங்குவதைத் தடை செய்வதற்கு வகை செய்யும் கம்பெனிச் சட்டத்திருத்த மசோதா அடுத்த வாரம் நாடாளுமன்றக் கூட்டத்தில் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மானேஜிங்-ஏஜென்சி முறையை ஒழிக்கவும் இம்மசோதா வகை செய்யும்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எல்லி.
திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 22 (4—5—68) சனி

காமராசர் பொறுப்புள்ளவராக இருந்தால்!

[3]

"தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர், சாதி இந்துக்கள் குடியிருக்கின்ற பகுதியில் ஒரு வீட்டைக் கட்டிவிட்டாராம். அதற்காக, அவரைக் கட்டிவைத்து உதைத்திருக்கின்றார்கள். அவர் இறந்துவிட்டார். போலீசில் **அவர் தற்கொலை செய்து கொண்டதாகப் பதிவு செய்துள்ளார்கள்.** தற்கொலை செய்து கொண்டு செத்திருப்பதாக சவப் பரிசோதனை நடத்திய டாக்டர் குறிப்பிட மறுத்தும்கூட—இப்படி நடைபெற்றிருக்கிறது. இம்மாதிரியெல்லாம் நடக்கிறது."

இந்தக் கட்டுக் கட்டுக்கதையை, 'காங்கிரசு வழக்குரைஞர்கள் மாநாடு' என நடைபெற்றிருக்கின்ற காங்கிரசார் கூட்டத்தில், பெருந்தலைவர் காமராசர் கூறியுள்ளார்.

இந்தக் கட்டுக் கதையைக் கூறிய அதே நேரத்தில் காங்கிரசு ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்த நன்மைகளைப் பற்றியும் அப்பெருந் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். அதுபற்றி இங்கு ஆராய்வதற்குமுன், தாம் ஒரு பொறுப்புள்ள அரசியல் தலைவராகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற நண்பராகவும், அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதில் மற்றவர்களைவிட மிகுதியான அக்கறை கொண்டிருப்பவராகவும், அனைத்துக்கும் மேலாக அநீதியை அழித்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதில் உண்மையான கருத்தும் நம்பிக்கையுமுடையவராகவும் இருப்பாரானால், காமராசர் என்ன செய்திருக்க வேண்டும்?

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை நேரில் சந்தித்திருக்க வேண்டும். தாம் குறிப்பிட்ட தாழ்த்தப்பட்ட குடிமகன் அடித்துக் கொல்லப்பட்ட நிகழ்ச்சியைத் தெரிவித்திருக்க வேண்டும். அவரை அடித்துக் கொன்ற—சாதி அகம்பாவம் பிடித்தவர்கள் யார் என்பதையும் அறிவித்திருக்க வேண்டும். கொலையை, 'தற்கொலை' எனப் பதிவு செய்யத் துணிந்த காவல் துறையினரின் 'அக்கிரம'ச் செயலையும் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

முதலமைச்சரை நேரில் சந்தித்துப் பேசுவது, தம் போன்ற பெருந்தலைவருக்குத் தகாது; அது தமக்கு இழிவை உண்டாக்கி விடக்கூடும் எனக் காமராசர் கருதுவதாக இருந்தால், முதலமைச்சரை சந்தித்துப் பேச அவர் போகவேண்டியதே இல்லை. தமக்கு நம்பிக்கையான காங்கிரசு நபர் ஒருவர் மூலம், தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒருவருக்கு ஏற்பட்ட கொடுமையை முதலமைச்சரிடம் அறிவிக்க முனைந்திருக்கலாம்.

தாமோ அல்லது தாம் அனுப்பிய நபரோ விளக்கமாகக் கூறிய இத்தகவலைக் கொண்டு முதலமைச்சர், நடவடிக்கை எடுத்துக் கொள்கிறாரா இல்லையா என்பதை, காமராசர், சிறிதளவாவது பொறுமை காட்டிப் பொறுத்திருந்து பார்த்திருக்க வேண்டும்.

இப்படி—இந்த நியாயமான முறையை—காமராசர் பின்பற்றிச் செயல்பட்டாரா என்றால் அதுதான் இல்லை.

தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒருவர், 'சாதி வெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்' எனக் கற்பனைக் கதையைக் கூறுவதன் மூலம், 'கழக ஆட்சி, பழங்குடி மக்களுக்கு விரோதமான ஆட்சி' என்ற கருத்தை உருவாக்க வேண்டும்; இதைக் கூறி, 'கழக ஆட்சிக்கு எதிராகப் பழங்குடி மக்களைத் தூண்டிவிட வேண்டும்' என்ற நச்சு நினைப்புடன் இருக்கின்ற காமராசர், 'முதலமைச்சரைச் சந்திப்பார்' என்று எதிர்பார்க்கலாமா? நீதி நிலைத்திட அவர் உழைப்பார் என்பதைத்தான் எதிர்பார்க்கலாமா? தாழ்த்தப்பட்ட மக்களின் துயர் துடைத்திட அவர் உண்மையில் ஆர்வம் காட்டுவார் என்பதைத்தான் எதிர்பார்க்கலாமா?

தாழ்த்தப்பட்டுக்கிடக்கின்ற மக்களைக் கைதூக்கிவிடுகின்ற கருணாமூர்த்தி காமராசர் ஒருவர்தான் இன்று உயிருடன் 'உலா' வந்து கொண்டிருக்கின்றார் என்பதைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால், அவருடைய செயல், அதை மெய்ப்பிக்கின்ற சான்றாகவுமல்லவோ அமைந்திருத்தல் வேண்டும்?

தாழ்த்தப்பட்ட குடிமகன் கொல்லப்பட்ட கதையைக் கூறி, காங்கிரசுக் கட்சிக்குத் தேவைப்படக்கூடிய அரசியல் இலாபத்தை மட்டுமே தேட விரும்புவதாக இருந்தால்கூட, அவர் பேசியுள்ள முறையும் அவர் செயல்பட்டிருக்கின்ற தன்மையும், அவர் விரும்புகின்ற அரசியல் இலாபத்தைக் காங்கிரசுக் கட்சிக்கு ஈட்டித் தருவதாக இல்லையே!

தாழ்த்தப்பட்ட குடிங்கன் கொலையுண்ட செய்தி சொந்தக் கற்பனையாக இல்லாமல் உண்மை நிகழ்ச்சியாக இருந்திடும்பட்சத்தில், அதைக் காட்டி அரசியல் இலாபம் பெற விரும்பும் காமராசர் என்ன செய்திருக்க வேண்டும் தெரியுமா?

சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சித் தலைவராக உள்ள கருத்திருமன் அவர்களைக் கொண்டு, கொலை நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டி ஒத்திவைப்புத் தீர்மானமோ, அவசரத் தீர்மானமோ சட்டப் பேரவையில் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்க வேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் கொண்டுவந்திருக்கலாம். இதேபோல், சட்டமன்ற மேலவையில் காங்கிரசுக் கட்சித் தலைவராக உள்ள இராஜாராம் அவர்களைக் கொண்டு ஏற்பாடு செய்திருக்கலாம்.

இப்படி ஏற்பாடு செய்திருந்தால், தாம் விரும்பிய அரசியல் இலாபத்தையும் அவர் பெற்றிருக்கலாம். அதே நேரத்தில், 'கழக ஆட்சியைக் கறைபடுத்த வேண்டும்' என்ற அவருடைய ஆசையும் நிறைவேறியிருக்கக்கூடும்.

தாழ்த்தப்பட்ட குடிமகன் கொலை பற்றிய செய்தி, தமது கட்டுக்கதையாக இல்லாமல் உண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியாக இருந்தாலல்லவா காமராசர் அவர்கள், மேற்குறிப்பிட்டபடி சட்டப் பேரவையின் துணையை நாடியிருப்பார்! தாழ்த்தப்பட்ட குடிமகன் கொலை செய்யப்பட்டதாகத் தாம் கூறும் செய்தி அப்பட்டமான பொய்யுரை என்பதைத் தெரிந்திருக்கின்ற காமராசருக்கு எப்படி சட்டப் பேரவையின் துணையை நாடத் துணிவு இருந்திட முடியும்? அதற்காகத்தான், வழக்குரைஞர்கள் மாநாட்டில், தமது கற்பனைக் கதையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றார்!

"பல இடங்களில் இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் கட்டிவைத்துக்கூட அடிக்கப்படுகிறார்களாம்."

இதுவும், காமராசர் திருவாய் மலர்ந்தருளியதுதான்.

காமராசர் அவர்களுக்குக் கடுகளவாவது பொறுப்புணர்ச்சி இருக்குமானால், அவர் குறிப்பிட்டிருப்பதுபோல், தாழ்த்தப்பட்ட மக்கள் பல இடங்களில் கட்டிவைத்து அடிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில், ஒரே ஒரு இடத்தை—அடியுண்ட தாழ்த்தப்பட்ட குடிமகனை—அவரை அடித்தவர்கள் விவரம் ஆகியவற்றை—இதுவரை குறிப்பிட்டுக் கூறாததை மறந்துவிடுகிறோம். இப்பொழுதாவது காலந்தாழ்த்தாமல், வெளிப்படையாகக் கூறவேண்டும். கூறுவாரா காமராசர்! பொறுப்புள்ள தலைவராக அவர் இருந்திடும்பட்சத்தில் உண்மையைக் கூறத்தான் கூறுவார்!

—கா. க.

விவசாய முறைகளை அறிய அண்ணா காட்டிய ஆர்வம்

பண்ணையைப் பார்வையிட்டுப் பல்வேறு தகவல்களையும் கேட்டறிந்தார்

அமெரிக்கக் 'குடியானவர்' இல்லத்தில் விருந்தோம்பல் --- இந்திய மாணவர்களிடையே உரையாடல்

மன்ஹாட்டன், மே. 4—அமெரிக்க நாட்டு வேளாண்மையிலுள்ள வாய்ப்புகள், சிக்கல்கள் குறித்துத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நேரில் அறிந்துள்ளார். பண்ணைகள் சிலவற்றைத் தாமே பார்த்தார்; குடியானவர்களுடன் நேரில் பேசி விவரங்கள் தெரிந்து கொண்டார்.

அமெரிக்காவின் மத்திய மேற்கு மாநிலமான கான்சாஸ் வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் ரேமாண்ட் பைன் என்பவரின் பண்ணைக்குக் காரில் சென்றார்; இது ஒரு 900 ஏக்கர் பரப்புள்ள பண்ணை. ரேமாண்ட் பைனும், அவரது மகன் ரோஜர் பைனும் (வயது 28) சேர்ந்து இங்கு வேளாண்மை செய்கிறார்கள். சோளம், சோயா, மொச்சை, அல்பர், பாபுல் ஆகியன முக்கிய பயிர்கள்.

பண்ணை இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்தவர் ரோஜர்; தமிழக மரபுப்படி 'வணக்கம்' கூறியவாறு அவர் முதல்வரை வரவேற்றார். தந்தையும் பிள்ளையும், அண்ணா அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி விளக்கினர்.

பண்ணையின் கதை

முதல்வர் கேட்டறிந்த பண்ணை வரலாறு சுருக்கமாக இதுதான்:—

பெரும்பாலான கான்சாஸ் பண்ணைகளைப்போல், இந்தப் பண்ணையிலும் பெருமளவுக்கு இயந்திரங்களின் துணையுடன் சாகுபடி நடைபெறுகிறது. 38,000 டாலர் விலை மதிப்புள்ள பண்ணை இயந்திரங்கள் இங்கு உண்டு. சிறிய கோளாறுகளைப் பண்ணையிலுள்ள பட்டறையிலேயே பழுது பார்க்கிறார்கள். பெரிய கோளாறுகள் ஏற்பட்டால் அருகிலுள்ள பண்ணை இயந்திரங்கள் பழுது பார்க்கும் நிலையத்துக்குச் செல்கிறார்கள்.

களையெடுக்கும் இயந்திரம் ஒன்று உண்டு; ஒரு நாளில் ஏறத்தாழ 80 ஏக்கர் நிலத்தில் இது களை வெட்டும். ஆட்கள் களையெடுப்பதாக இருந்தால் ஒரு நாளில் ஒரு ஏக்கரில்கூட வேலை நடக்காது.

பல பணி இயந்திரம்

விதைத்தல், உரமிடல், மருந்து தெளித்தல் ஆகிய மூன்று வேலைகளையும் ஒரே சமயத்தில் செய்கிறது—மற்றொரு இயந்திரம். ஒரு நாளில் 70 ஏக்கரில் இது வேலை செய்து முடிக்கிறது.

நெடுநாள் மழையில்லாவிடில், கான்சாஸ் ஆற்றிலிருந்து விசைக் குழாய்கள் மூலம் நீர்ப்பாசனம் நடக்கிறது. பெரும்பாலான வேலைகளை தந்தையும் மகனுமே செய்கின்றனர்; ஏனெனில், கூலி வேலைக்கு ஆள் கிடைப்பது குதிரைக் கொம்பு. மணிக்கு 2 டாலர் வீதம்தான் பைன்கள் கொடுக்க முடியும்; ஆனால் ஆலைகளிலோ தொழிலாளருக்கு அதிகமான ஊதியம் கிடைக்கிறது. இருவருக்குமாகச் சேர்ந்து ஆண்டுக்கு ஏறத்தாழ 11,000 டாலர் நிகர வருவாய் கிடைக்கிறது.

பைன் பண்ணையில் அண்ணா அவர்கள் பெரிய பெரிய தானியச் சேமிப்புக் 'குதிர்'களைப் பார்த்தார். இவை, ஒவ்வொன்றும் 50 000 புஷல் தானியம் பிடிக்கும். அரசாங்கத்துக்கு விற்கும் தானியங்களை அவர்கள் இவற்றில் சேமித்து வைக்கிறார்கள். சேமித்து வைத்திருப்பதற்காக அரசாங்கம் வாடகை கொடுக்கிறது. சாதாரணமாக ஓராண்டு வரையில் தானியங்கள் சேமித்து வைக்கப்படும். குடியானவர்கள் விரும்பினால் மீண்டும் அரசாங்கத்திடமிருந்த இந்தத் தானியங்களை வாங்கிக் கொள்ளலாம்.

பண்ணையைச் சுற்றிப் பார்த்த பின்பு, குடியானவர் வீட்டுக்கு அண்ணாவும் அவரது குழுவினரும் சென்றனர். சிறிய பைனின் தாயார், மனைவி, மூன்று வயது மகள் ஆகியோரை அண்ணா அவர்கள் சந்தித்து, உரையாடினார். தேநீர், கேக்குகள், பழங்கள் கலந்த உணவுப் பண்டங்கள் கொண்ட சிற்றுண்டி விருந்தாளிகளுக்கு வழங்கப்பட்டன. பழமையான விருந்தினர் அறை ஒன்றில் அமர்ந்து, குடியானவர் குடும்பத்தோடு உரையாடிய வண்ணம், அவர்கள் படைத்த உணவுகளை உண்டார்.

பண்ணையிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, முற்றத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்து, பைன் குடும்பத்தினரோடு படங்கள் எடுத்துக் கொண்டார். முதல் அமைச்சர் தமிழகம் திரும்பியதும் இந்தப் படங்களின் பிரதிகளை அனுப்பிக் கொடுப்பதாக ரோஜர் வாக்களித்தார்.

பின்பு, 117 மைல் தொலைவு காரில் பயணம் செய்து, சான்சாஸ் அரசாங்கப் பல்கலைக் கழகத்துக்கு அண்ணா அவர் அவர்கள் போய்ச் சேர்ந்தார்; வழி நெடுகப் பண்ணைகளையும், பட்டணங்களையும் பார்த்துக் கொண்டே அவர் வெகு வேக நெடுஞ்சாலை வழியாகப் பயணம் செய்தார்.

பல்கலைக் கழகத்தில்

செவ்வாய் மாலையில் பல்கலைக் கழகம் போய்ச் சேர்ந்தார். மாணவர் மன்றத்துக்குச் சென்றார்; இங்கு இந்திய மாணவர்கள் சங்கம் தேநீர் விருந்தளித்தது. 100 இந்தியர்கள் இங்கு படிக்கின்றனர். இந்த ஆண்டில் 400 வெளிநாட்டவர்களுக்கு மேல் இங்கு படிக்கின்றனர்.

கலைகள்—விஞ்ஞானக் கல்லூரிடீன் டாக்டர் ஜான் சாமர்ஸ், தமிழகத் தலைவருக்கு விருந்தளித்தார். பேராசிரியர்கள்: கென்னத் ஜோன்ஸ் (வரலாறு), பால் ஹீபர்ட் (மானிடர் வரலாறு), வில்லியம் போயர் (அரசியல்) முதலியோர் விருந்தில் கலந்துகொண்டனர். இவர்கள் மூவரும் பல்கலைக்கழகத்தின் தெற்கு ஆசிய நிலையத்தில் பணியாற்றுவோர்.

நிலையத்தின் இயக்குநர் டாக்டர் ஜார்ஜ் மாண்ட கோமரி செவ்வாயன்று அண்ணாவைச் சந்திக்க முடியவில்லை; ஏனெனில், அண்ணா ஒரு நாள் முன்னதாகவே பல்கலைக்கழகத்துக்கு வந்துவிட்டார். இயக்குநர் வெளியூரில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார்.

நிலையத்தின் புதிய இயக்குநர் டாக்டர் ஆல்பர்ட் பிராங்க்ளின், வரும் இலையுதிர்-காலத்தின் போது வந்து சேருவார் என எதிர்பார்ப்பதாக நிலையப் பேராசிரியர்கள் தெரிவித்தனர். சென்னையில் தற்போது அமெரிக்க கான்சல்-ஜெனரலாகப் பணியாற்றிவருகிறார் டாக்டர் பிராங்க்ளின்.

புதன்கிழமை அண்ணா அவர்கள் பங்கு கொண்ட நிகழ்ச்சிகள்:—காலையில் பல்கலைக்கழக வானொலி நிலையத்தில் பேட்டி; பல்கலைக்கழக அதிகாரிகளுடன் சந்திப்பு; வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிடல்; பல்கலைக்கழக அதிகாரிகளுடன் பகல் உணவு; பிற்பகலில் மாணவர் மன்றக் கட்டடத்திலுள்ள பல்கலைக்கழகச் சிற்றரங்கில் சொற்பொழிவு—தெற்கு ஆசிய நிலையம் ஏற்பாடு செய்தது, இது.

புதன்கிழமை மாலையில் அண்ணா அவர்கள், விமானத்தில், கான்சாஸ் நகரம் சென்று, அங்கிருந்து லாஸ் ஏஞ்சலஸ் நகருக்குப் புறப்பட்டார்.

கான்சாஸ் நகர விமான நிலையத்துக்கு அண்ணா செல்வதற்குப் பல்கலைக்கழகம் தனி விமானம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

பஞ்சத்தை ஒழிக்க முயற்சி

ரூ. 500 கோடியில் திட்டம்—ஆந்திர முதல்வர் தகவல்

கர்னூல், மே 5—"தமிழகம், மைசூர், மகாராட்டிரம், ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் உள்ள சுமார் ஓர் இலட்சம் சதுரமைல், பஞ்சப் பகுதிகளில், பஞ்சத்தை அடியோடு ஒழிப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 500 கோடிக்கு ஒரு திட்டத்தை உருவாக்க முயற்சிக்கப்படும்"

என்று ஆந்திர முதலமைச்சர் பிரமானந்த ரெட்டி, பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

இத்திங்களில், டெல்லியில் நடைபெறவிருக்கும் முதலமைச்சர்கள் மாநாட்டில், இந்தத் திட்டம் விவாதத்திற்கு வரும்.

குளங்களை ஆழப்படுத்த ரூ. 3-இலட்சம் அனுமதி

நாகர்கோவில், மே 4—குமரி மாவட்டத்தில் உள்ள எல்லாக் குளங்களையும் ஆழப்படுத்திச் சீராக்குவதற்குத் தமிழக அரசு, ரூ. 3-இலட்சம் அனுமதித்திருக்கிறது.

கைத்தறித்துணிகளை எடுத்துவர அரசு பஸ்களில் சலுகை

தமிழக அரசின் உடனடி உத்தரவு

சென்னை, மே. 4—

ஆரணியிலிருந்து சென்னைக்கு வருகின்ற அரசாங்கப் பஸ்களில் கைத்தறி மூட்டைகளைக் இலவசமாகவே அதிகக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது; இதனை உடனடியாகக் கவனித்துக் குறைப்பதற்கு அமைச்சர் மு. கருணாநிதி உத்தரவிட்டிருக்கிறார்.

ஆரணியிலிருந்து சென்னைக்கு வருகின்ற எல்லா பஸ் வழிகளிலும் சேவையாளர்கள் கொண்டு வருகிற புதிய சேலைகள் கொண்ட சுமைகளை விசாரிக்கும் மற்றும் அந்தச்சுமை இங்களிலிருந்தும் கண்டிப்பாக ஏற்றிவர வேண்டும்.

50 சேலைகள் கொண்ட மூட்டைக்கு 75 காசும், 100 சேலைகள் கொண்ட மூட்டைக்கு ரூ. 1.75-ம், 150 சேலைகள் கொண்ட மூட்டைக்கு ரூ 2.50-ம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இரண்டு கன்னக் தரமுடியுமா?' என்பது பிரச்சினை; ஒரு கட்டண அமைத்த பிறகுதான் புதுக்கட்டாரம் என்று விதி இருக்கிறது; ஆகவே, இந்தச் சிக்கல்கள் பற்றியெல்லாம் அண்ணு அவர்கள் சென்னை திரும்பியதும் விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

பஸ் ஊழியர் வேலைக்கு வயது வரம்பு

பஸ் கண்டக்டர் வேலைக்கு வயது நிர்ணயம் குறித்த கேள்விக்கு அமைச்சர் கருணாநிதி அளித்த பதிலாவது:—

"அரசாங்கப் பஸ் போக்குவரத்தில் கண்டக்டர்களும், டிரைவர்களும் வேலைக்கு சேரும்போது குறைந்தபட்ச வயது வரம்பு அதிகரிக்கப்படுகிறது இது வரையில், 18 வயது நிரப்பியவர்களுக்குக் கண்டக்டர், டிரைவர் வேலைகள் கிடைத்து வந்தன. இனி கண்டக்டர் வேலைக்கு குறைந்தபட்சம் 25 வயதும், டிரைவர் வேலைக்கு 28 வயதும் ஆகியிருக்க வேண்டும் என அரசு உத்தரவு போட்டுள்ளது.

"டிரைவர், கண்டக்டர் பயிற்சிக் காலம் 40 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது."

தென்னகத்தில் தொழில்கள் வளர வகைசெய்வீர்!

அனுமதி வழங்கும் அதிகாரத்தை மாநில அரசிடம் விடவேண்டும்

நாடாளுமன்ற மேலவையில் அப்பன் வற்புறுத்தல்

புதுடில்லி, மே 2—

"தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குமேலே சென்னை கழங்கும் அதிகாரத்தை மாநில அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும்"

என்று கழக உறுப்பினர் ஜி. ஏ அப்பன், நாடாளுமன்ற மேலவையில் கோரினார்.

நிதிமுக்கிடு மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில், மேலும் குறிப்பிட்டதாவது:—

"தென்னகத்தில் தொழில்களின் வளர்ச்சி வேகம் மிகவும் மெதுவாக இருக்கிறது. தொழிலில் பொருள் வீரயமாகவதைத் தடுக்க வேண்டும்; உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும்."

இரண்டு புதிய சர்க்கரை ஆலைகள்

தமிழகத்தில் இவ்வாண்டு தொடங்கும்

மதுராந்தகம், ஏப். 30—

'சோவை மாவட்டத்தில் ஒன்று, வட ஆர்காடு மாவட்டத்தில் ஒன்றும் ஆக இரண்டு சர்க்கரை ஆலைகள் இவ்வாண்டு ஏற்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது"

என அமைச்சர் கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

திருத்தணியில் செங்கற்பட்டு மாவட்ட உற்பத்யாளர்களின் மாநாட்டுக்கு வந்திருந்த அமைச்சரை, திருத்தணி வட்டக் விசாய சங்கத்தினர் சந்தித்துத் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்தனர்; திருத்தணி வட்டத்தில் கிணறுகளை வெட்டாலும் சரியாகத் தண்ணீர் கிடைக்கவில்லை என்றும், கிணற்றை நீர் வண்டுபிடிப்புக்கூடியும் சாதனங்களையும் கொடுத்து உதவும்படியும், திருத்தணியில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவும்படியும், மலிவு விலையில் உரம் அளிக்கும்படியும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கோரிக்கைக்கு அமைச்சர் பதிலளிக்கையில், திருத்தணியில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு நிதான மாகத்தான் பரிசீலிக்க முடியும் என்றும், ஏற்கனவே தமிழகத்தில் இரண்டு இடங்களில் அரசு ஆலை நிறுவ எடுக்கப்பட்டுள்ளது என்றும், எதற்கும் திருத்தணியில் நிறுவ தாம் முயற்சிகள் எடுப்பதாகவும் கூறினார்.

'நிர்வாகப் பொறுப்புக்களை டில்லி கைவிட வேண்டும்'

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் யோசனை

புதுடில்லி, மே 3—

'மத்திய அரசு, தனது நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தையும் வலுவிட்டுவிட்டு, கொள்கைகளை நிர்ணயிக்கும் பொறுப்புக்களை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும்"

என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் ஆய்வுக் குழு யோசனை தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தரங்கைத் துவக்கி வைத்த இக்குழுவின் தலைவர் திரு. அமுமங்கையா இதுபற்றித் தெரிவித்தாவது:—

"தேசிய கட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு மாறில அரசுகளிப் பலப்படுத்தவும், அவற்றிற்கு அதிகப் பொறுப்புக்களை வழங்கவுமே இந்த யோசனை கற்பட்டிருக்கிறது.

'மாறில மட்டத்திலும், மற்ற மட்டங்களிலும் புதிய நிர்வாக முறையை ஏற்படுத்தவேண்டும்' என்று ஆய்வுக் குழு யோசனை கறியுள்ளது; ஆனால், முக்கிய மான அடிப்படைப் பகுதியில்— அதாவது மாவட்ட மட்டத்தில் நிர்வாகத்தைப் பலப்படுத்தவேண்டும் என்று விரும்புகிறேன். மாவட்ட அதிகாரிகள் தங்கள் பொறுப்புக்களை உணரும்படிச் செய்வது மிகவும் முக்கியம்.

மிகச் சிறந்த முறையில் கடமையாற்றும் மாவட்ட அதிகாரி, மாறில அளவில் தேவைப்படும் செயலாளராக வரவேண, செயலாளராக வரவோ ஊக்கமளிக்கவேண்டும்; சில முக்கியமான பதவிகளை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு மட்டுமே ஒதுக்குவது விரும்பத்தக்க தல்ல; மேலே வளர்ப்புக்களில் சமூக நீதி வழங்கவேண்டும்."

பள்ளிகளுக்கு வெள்ளையடிக்கும் பணி

அந்தியூர் ஒன்றியத்தில் சிரமினியர் ஈடுபாடு

அந்தியூர் மகாராட்சி ஒன்றியத்திலுள்ள 56 துவக்க, உயர் துவக்கப் பள்ளிகளும் சீரணித் தொண்டர்களைக் கொண்டு வெள்ளையடிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

தமிழக அரசு ஆணைக்கிணங்க 56 பள்ளிகளிலும், வெள்ளையடிக்கத் தலையாசிரியர் ள—ஆசிரியர்கள் — சீரணியினர் — கல் விரிவு அலுவலர் ஆகியோரின் தீவிர முயற்சியோடு 1—5—68 முதல் 15—5—68-க்குள் செய்து முடிக்க வேண்டுமென அவர்களுக்கு அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் டி. சே. வெங்கடாலம் எம்.ஏ., அறிக்கை விடுத்துள்ளார்.

சீரணியின வேலையைப் பார்வையிடவும், கல்வி ஊக்கம் கொடுக்கவும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே. கே. சுப்பிரமணியம், அந்தியூர் சட்டமன்ற உறுபினர் இ. எம். கடராசன் பி.ஏ.,பி.எல்., ஆணையாளர் ஆகியோர் எல்லாப் பள்ளிகளையும் சுற்றிப்பார்க்கத் திட்ட மிட்டுள்ளனர்.

இந்த வேலை 15—5—68-க்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் பிரசார வெளியீடுகள்

ஒரு முக்கிய அறிவிப்பு

அண்மையில் தமிழ்ச் சட்ட மன்ற மேலவைக்கு இரு ஆண்டுகளுக்கு ஒரு முறையான தேர்தலில், சுயேரட்டிகள், வெளியீடுகள் ஆகியவற்றை அச்சிட்டவர்கள் 1951-ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட 127-ஏ பிரிவினைச் சரியாக அனுசரித்து நடக்கவில்லை என்று தெரியவந்துள்ளது.

அச்சிடப்பட்டோர் அல்லது வேறு முறைபிலோ (கையால் எழுதப்படுவது தவிர) உருவாக்கப்படும் வெளியீடு, நோட்டீசு, சுவரொட்டி ஆகியவற்றின் ஒவ்வொரு பிரதியிலும் முன்பக்கத்தில் அச்சிட்டவரின் பெயர், முகவரி—வெளியிட்டரின் பெயர், முகவரி இருக்க வேண்டும் என்பதுதான் சட்ட விதி. இவற்றை அச்சிடுபவர், வெளியிடுபவர் அடையாளம் சம்பந்தமாக அவரது கையொப்பத்துடன் இரண்டு பிரதிகளில் உறுதிமொழியைப் பெறவேண்டும். அவரை நன்கு அறிந்த இருவர் அதற்கு நற்சான்று அளிக்க வேண்டும்.

மாநிலத் தலைமைக்கில் அச்சான தும், வெளியீட்டாளர் உறுதிமொழியின் ஒரு பிரதியையும், வெளியீட்டின் ஒரு பிரதியையும் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கும், மாவட்டங்களில் வெளியிடப்பட்டால் மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கும் (மாவட்ட கலெக்டர்) அனுப்பி வைக்க வேண்டும்.

சட்ட விதிக்குப் புறம்பாக நடந்துகொள்பவர்களுக்கு ஆறு மாதம்வரை சிறைத் தண்டனையும், இரண்டாயிரம் ரூபாய்வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

இந்த நிபந்தனை, தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெறும் நாளுக்கு 24-மணி நேரத்துக்கு முன்பு வரை தமிழ்நாட்டில் பொருந்தும் என்று தேர்தல் ஏஜெண்டுகள் பணியாளர்களுக்கான தண்டு வெளியீடுகளுக்கும் இல்லை.

அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், அச்சகச் சொந்தக்காரர்களும் 1951-ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 127-ஏ பிரிவினைப் உள்ள சட்ட விதிகளை ஒழுங்காகப் பின் பற்ற வேண்டும் என்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி மீண்டும் வலியுறுத்துகிறார்.

சென்னையில் முதலமைச்சர்கள் மாநாடு

சூன் திங்களில் நடைபெறும்

புதுடில்லி, மே 2—

சமுதாய வளர்ச்சித் திட்டம் பற்றிய முதலமைச்சர்கள் மாநாடு, சூன் திங்கள் 15-ம் நாளுக்குள் சென்னையில் நடைபெறும். இந்த மாநாடு மே 20-ம் நாள் நடைபெறுவதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

டில்லியில் மே 17, 18-ம் நாட்களில் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெறவிருப்பதன் காரணமாக சமுதாய வளர்ச்சி மாநாடு டில்லியிலேயே மேற்கறிய நாட்களில் நடைபெற முடியுமா என்பது பற்றித் தற்போது அமெரிக்கச் சுற்றுப்பயணத்திலி ருக்கும் அண்ணு அவர்களிடம் கேட்டறியப்பட்டது.

"இந்த மாநாடு நடைபெறும் இடத்தை மாற்ற வேண்டாம்; வேண்டுமானால் மாநாட்டுத் தேதியை சூன் 15-ம் நாள்வரைக்கில் ஒத்திப் போடுங்கள்" என்று அண்ணு அவர்கள் அமெரிக்காவிலிருந்து தொலைபேசி மூலம் மத்திய உணவு அமைச்சர் சுப்சைவன் ராமிடம் கேட்டுக்கொண்டார்.

அண்ணுவின் யோசனையை சுப்சிவன்றாம் ஏற்றுக்கொண்டார்.

சென்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர், சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப் பற்றிய பேச்சுக்கள் உயர் மட்டத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவை.

இத்திட்டத்தின் மூலம் கிராமப் புற வளர்ச்சிக்கு எந்த அளவு பலன் கிடைக்கின்றது — அங்கு இத்திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது — என்பனவற்றைக் காங்கிரஸ்லை தமில அரசுகள் கருதுதில் கொண்டு செயல்படுகின்றன.

மறைவு

சென்னை 92-வது வட்டம் காமராசர் காலனியைச் சேர்ந்த கழகத் தோழர் சோலிங்கசாமி (திலகி) 28—4—68 அன்று அகால மரண மடைந்தார். அவருக்கு வயதான தாயாரும், மனைவியும் குழந்தை களும் உள்ளனர். செய்தியறிந்து மாகாராட்சி உறுப்பினர் ஏ. எஸ். ஜராமன், மற்றும் கிளைச் சுருளி நிதி மன்றத் தோழர்களும், கழகத் தோழர்களும் சென்று மாலையனி வித்துத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர். மறு நாள் சவ அடக்கம் செய்யப்பட்டது.

வட மதுரை தி.மு.க. கிளையின் உறுபினர் இரா. வீரசாமி 25—4—68-ல், தமது 25-வது வயதில் அகால மரணமடைந்தார்; மறுநாள், சவ அடக்கம் செய்யப் பட்டது; இளம் மனைவியும் குழந்தைகளும் உள்ளனர்.

வட மதுரை தி.மு.க. கிளையின் உறுபினர்கள் வீடுதோறும் சென்று மக்களிடையே பெற்றோர்களுக்கும் உடன்பிறந்த தி.மு.க. சார்பில் ஆற்ற அறுதலுரையும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

பொது மக்கள் பிராவிடண்ட் நிதித் திட்டம்

வெ. கிருஷ்ணமூர்த்தி பேச்சு

புதுடில்லி, மே 2—

"பொதுமக்கள் வைப்பு நிதி (பிராவிடண்ட் பண்ட்) மசோதா உறுதிப்பாட்டிற்கு ஒன்றுமே"

என்று கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி, மக்களவையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அரசின் சார்பில் எவ்விதச் சக்தாவும் செலுத்தாமல் ஒருவைப்பு நிதித் திட்டம் எப்படி இயங்க முடியும்?" என்று அவர் கேட்டார்.

"'பசி'யுள்ள மாலிலங்களின் தேவையை நிறைவு செய்யவே இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது" என்று அவர் சுட்டிக் காட்டினார்.

"பாங்கிகள் கோரும் வட்டியை விட, இத்திட்டத்தில் வட்டி விகிதம் குறைவாக உள்ளது" என்றார்.

"வட்டி விகிதம் உயர்த்தப்பட்டாலன்றி யாரும் இதில் பணம் போட முன்வரமாட்டார்கள்" என அச்சம் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களில் அரசியல்

'ஒரு தொழிற்சாலையில், பல தொழிற்சங்கங்கள் இயங்குவதைத் தமிழக அரசு விரும்பவில்லை; ஒரு தொழிற்சங்கம் இயங்குவதைத்தான் தி.மு.க. அரசு கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

"விவசாயி உயர்வுக்கேற்ப கூலி உயர்வு கேட்பது நியாயமற்றன; இது தவறல்ல; இதற்கான சட்ட திட்டங்களைக் கொண்டுவர நினைக்கிறோம். இதற்குக் கட்சிகள் வேண்டாம்; கட்சிகள் சார்பில் தொழிற்சங்கங்கள் இருந்தால் பிரச்சினைகள் அதிகமாகும். அரசியல் கட்சித் தலைவர்களின் நடப்பை தொழிலாளர்கள் தராதாழைக்குக் காரணமாகும்.

"கொள்கை வேறுபாடு இருப்பது சகாயகத்தில் இயல்பானதே; எனினும், பண்பட்ட அரசியல் வளர்ந்து சகாயகத்தைத் தழைக்கச் செய்யவேண்டும்.

"வேலைநிறுத்தங்களால் காட்டின் பொருளாதாரம் சீர்கெடும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சிறந்த வழிகளைத் தேட வேண்டும்.

"விவசாயிகளைக் குறைப்பது தான் அரசின் அடிப்படைக் கொள்கையாகும்.

"அரசியல் நாகரிகத்தை வளர்க்க வேண்டும். இது வளர்ந்தாலொன்ன நாடு உருப்படும் பொருளாதார வளம் ஏற்படும்."

--அமைச்சர் கே. மாதவன்
(இராணிப்பேட்டையில்)

பறம்புமலையில் பாரி விழா

அமைச்சர் மாதவன் துவக்கி வைக்கிறார்

வள்ளல் பாரி வாழ்ந்த பறம்பு மலை "என்னும் பிரான்மலையில், பாரி விழா நடைபெறுகிறது.

7—5—68 காலை 8-மணிக்கு, கபிலர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவை அமைச்சர் திரு. செ. மாதவன் துவக்கி வைக்கிறார்; திரு. பெரியப்பன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுவார்.

பெரும்புலவர் நடேச முதலியார் தலைமையில் கருத்தரங்கும், குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெறும். பேரூர் இராமசாமி அடிகள், சமரப் புலவர் இராமகாத பிள்ளை, ஜி. ஆர். தாமோதரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

சென்னை 79-வதுவட்ட அறிஞர் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத் தோழர்கட்கு:

சென்னை 79-வது வட்ட அறிஞர் அண்ணா அறிவு வளர்ச்சி மன்ற நிர்வாகிகள் தேர்தல் வட்டச் செயலாளர் கு. மு. சிறுதொண்டன் அவர்களை ஆலோசனையாகக் கொண்டு 6—5—68 இரவு 8-மணிக்கு மன்றப் பணிகளில் ஈடுபடும்; மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கா. காளிமுத்து நிதர்ச்சினை

மே 7 : சிலையமைப்பு ; 3 : தேவாரம் ; 9 : சிவஞானபோதம் ; 10 : மேலக்கதர்ந்தை ; 11 : வெம்பக்கோட்டை ; 12, 13, 14 : சாத்தூர் வட்டம் ; 15 : கல்லாள்குளம் ; 19 : சத்திரரெட்டியபட்டி ; 20 : பாப்பாகயக்கன்பட்டி ; 24 : இராமச்சந்திரபுரம் ; 27 : கலுங்குப் பட்டி.

அரிஜர் அண்ணாவிடம் பலகலைக் கழக அதிகாரிகள் தகவல்

'ஆய்வுக்கூட ஆராய்ச்சியின் பலன் அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது'

'வானொலிகளும் அவற்றை ஒலிபரப்புகின்றன'

மன்னார்குடி, மே 4—

காஞ்சாஸ் அரசுப் பல்கலைக் கழக வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்துக்கு முதலமைச்சர் சென்றிருந்தபோது, சென்ற ஆண்டு விசிய குருவலி வினவித்துள்ள கடும் சேதங்களில் சிலவற்றைக் கண்டார். வித்துச் சேமிப்புக் குதிர்கள், கோழிப் பண்ணைகள் அனைத்தும் பலப்பல ஆய்வுக்கூடங்களும் புயலில் அழிக்துவிட்டன. 15 இலட்சம் டாலர் மதிப்புக்கு கட்டம். பழுதானவற்றை யெல்லாம் புதுப்பிச்சும் வேலை இன்னமும் நடைபெற்றுவருகிறது.

"ஆய்வுக்கூடத்தில் நடக்கும் ஆராய்ச்சிகளின் பலன்கள் எல்லாம், பல்கலைக் கழக வெளியீடுகள்—ஆராய்ச்சிக் கட்டுரைகள்—செய்தி அறிக்கைகள் மூலம் குடியானவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன" என்று அதிகாரிகள், அண்ணாவிடம் தெரிவித்தார்கள்.

பல்கலைக் கழகம் தினந்தோறும் நடத்தும் வானொலி நிகழ்ச்சிகளில், 'இன்றைய வேளாண்மை' என்ற தலைப்பில் அவற்றை ஒலிபரப்பும் செய்கிறார்கள்.

வானொலியில் பேட்டி— பேராசிரியர்கள் கேள்வி

கான்சாஸ் அரசாங்கப் பல்கலைக் கழகத்தில் இருநாட்கள் தங்கிய அண்ணா அவர்கள், 'இந்திய நாட்டின் வளப்பகமும் சிக்கல்களும்' என்ற தலைப்பில், வானொலிக்குப் பேட்டியளித்தார்; இது பல்கலைக் கழக வானொலி.

இங்குள்ள தெற்கு ஆசிய நிலையத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள், பேட்டியில் கேள்விகள் கேட்டனர். இவர்களில் நிலையத்தின் தற்காலிக நெறியாளர் டாக்டர் ஜார்ஜ் மாண்ட் கோமரி, பல்கலைக் கழக அரசியல் அறிஞர் வில்லியம் போயார் இருவரும் முன்பே இந்தியாவில் விரிவாகப் பயணம் செய்தவர்கள்.

தலைவரின் வருத்தம்

கடந்த புதனன்று முற்பகலில் பல்கலைக் கழகத் தலைவர் ஜேம்ஸ் மெக்ரெய்ன், அண்ணா அவர்களைச் சந்தித்து, முதல் நாள் பல்கலைக் கழகத்தில் அவருக்கு நல்வரவு கூறத் தாம் இருக்கமுடியாமற்போனதற்காகத் தமது வருத்தம் தெரிவித்துக்கொண்டார்.

முதல்வர் ஒரு நாள் முன்னதாகவே வந்துவிட்டார்; துரதியாகு மாலைத்தில் ஒரு மாநாட்டில் கலந்துகொள்ள டாக்டர் மெக்ரெய்ன் போயிருந்தார்.

விருந்தோம்பல்

பல்கலைக் கழகத்தின் வேளாண்மைப் பிரிவுத் துணைத் தலைவர் டாக்டர் கிளன் பெக், தமிழக முதல்வருக்குப் பல விருந்தளித்தார். தலைவர் மெக்ரெய்ன் வேறு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால் அவரது சார்பில் டாக்டர் கிளன் பெக் விருந்தோம்பினார்.

சர்க்கரை உற்பத்தியில் அக்கறை காட்டினர்

திங்கட்கிழமை காலையில் போர்ட்டோ ரீக்கோ நாட்டில் 'பாசார்டோ' சர்க்கரை ஆலைக்கு அண்ணா சென்றிருந்தார். சான் ஜுவான் நகரிலிருந்து 30 மைல் கிழக்கில் இது இருக்கிறது.

கரும்பு விளையும் பூமியான தமிழகத்திலிருந்து சென்றுள்ள முதல்வர், இங்காட்டின் சர்க்கரை உற்பத்தி முறைகள் பற்றி அறிவதில் மிகுந்த அக்கறை காட்டினர். இயந்திர முறையிலும், இரசாயன முறையிலும் இங்கு உற்பத்தி நடைபெறுகிறது.

திங்கள் பிற்பகலில் போர்ட்டோ ரீக்கோ வெளி உறவுத் துறைச் செயலாளர் கல்லாடோ இரிலாரியுடன் அண்ணா பேசிக் கொண்டிருந்தார்; அமெரிக்கா வுடன் தமது நாடு கொண்டுள்ள உறவு முறை பற்றி அவர் விளக்கினார்.

கடந்த சில ஆண்டுகளில் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் தமிழரத் தலை வருக்குத் தெரிவிக்கப்பட்டன.

தீவின் தொழில் வளர்ச்சியும் பொதுவான பொருளாதார முன்னேற்றமும் தமக்கு வியப்பூட்டுவதாக அண்ணா அவர்கள் தெரிவித்தார்.

அன்புச் சந்திப்பு

மியாமிக்கருகே முப்பப்படுவதற்கு முன்பு, விமான நிலையத்தில் டேடுபொராசை—தமது மனைவியுடன், முதல அமைச்சரைச் சந்தித்தார். லார்ன், ஒரு பாங்கியின் தலைத் தலைவர்; அவரது மனைவி, சென்னை ஈராயிரமான அமெரிக்க முதாட்டி மிஸ மேரி பக் அம்மையாரின் உறவினர்.

சென்னையிலுள்ள அமெரிக்கக் கான்சல், இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். அண்ணுவுகு அவர், ஒர் அறிமுகக் கடிதம் கொடுத்தனுப்பி இருந்தார்.

தலைமைக் கழக அறிக்கை : 6'68

வ. ஆ. மாவட்டம்

ஆர்பூர் நகரம்

50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் எண்ணிக்கைகொண்ட நகரமாக அறிவிக்கப்படுவதால், அது, கழகச் சட்ட நிட்டம் விதி-7 பிரிவு 5-ன்படி உட்பட அமைத்துக் கொள்ள வும், விதி 7 பிரிவு 9, 10, 11 ஆகியவைகளின்படி பெருநகரக் கிளை அமைத்துக் கொள்ளவும் தகுதிபடைத்த பெருநகரமாக இதன்மூலம் அறிவிக்கப் படுகிறது.

'அறிவகம்' சென்னை-13 4—5—68 } —தலைமைக் கழகம் (நி.மு.க.)

நடக்க இருப்பவை

5—5—68

திருச்சி

வள்ளுவர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர் : எம். இராமையா; பேசுவோர் : மதுரை கே. எஸ். சந்தானம் எம்.சி., புலவர் பொன்னம்பலனார், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., அ. நடராசன், எம். இராமையா பி.ஏ. பி.எல்., என். சுப்பையா பி.ஏ. பி.எல்., ஆர். ஜி. துரைசாமி பி.ஏ.பி.எல், தா. கருணுகான், டி. எஸ். குஞ்சிதபாதம், ஆ. பிச்சை, வி. கிருட்டினமூர்த்தி.

6—5—68

வெங்கமேடு

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வானொலித் திடலில்; தலைவர் : ஆர். என். இராம சாமி; பேசுவோர் : ஆ. திராவிடமணி, என். ஆர். இராமசாமி, பரமத்தி சண்முகம், கே. கனகராசு பி.ஏ.பி.எல்., ப. கிருஷ்ணன்.

சென்னை 10-வது வட்டம்

அண்ணு அறிவு வளர்ச்சி மன்ற—எம். ஜி. ஆர். இரவுப் பள்ளி இரண்டாம் ஆண்டு விழா; மாலை 7-மணிக்கு வண்ணக் கல்லறைத் திடலில்; தலைவர் : வி. பி. சாரதி; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.ஏ.பி.எல்., க. அறிவழகன் எம்.எல்.சி., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. கே. மாரியப்பன், ந. இராமானன்ர், மற்றும் பலர்.

அப்பக்கரை

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு காளியம்மன் கோயில் திடலில்; தலைவர் : எம். ஏ. அயோத்தி; கொடியேற்றுபவர் : உ. மா. கண்ணு; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., மு. காசாமைதின், பி. கே. வேலன், பி. திருமர், எஸ். துரைராஜ், சு. இராமசாமி, எம். ஆர். சங்கம ரெட்டி, எஸ். கனகராசன்.

சென்னை 9-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு இராயபுரம் மீனுட்சியம்மன் பேட்டையில்; தலைவர் : வி. எஸ். ஆனந்தன்; பேசுவோர் : அமைச்சர் மு. கருணுநிதி, வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., இளம்பரிதி, கு. இராமலிங்கம், டி. வெங்கடேசன் எம்.சி., நீலகாராயணன், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பி. கே. மாரியப்பன்.

7—5—68

சென்னை 27-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெருமாள் கோயில் நோட்டம் முதல் சந்தில்; தலைவர் : இர. வனாங்காமுடி ; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., சிட்டிபாபு எம்.பி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., கஸ்தூரி பி.எஸ்சி., எம். ஆர். சந்திரன்.

சிற்றார் -- பேரூர் -- பெருநகர உட்கிளை செயலாளர்களுக்கு

முக்கிய அறிவிப்பு

மே 4, 5 ஆகிய நாட்களில் நடைபெறும் சிற்றார்—பேரூர்—பெருநகர உட்கிளைகளின் தேர்தல் முடிவுகளை விளக்கமாக வும், தேர்வாகவும், அதற்கெனத் தலைமைக் கழகத்திலிருந்து ஒவ்வொரு கிளைக்கும் அனுப்பப்பட்டிருக்கும் தாளில் நிரைவு செய்து உடனடியாக வும், 8—5—68-ஆம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் வகையில் அனுப்பிவிட வேண்டும் என்று இதன் மூலம் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தலைமைக் கழகத்திற்கு அனுப்புவது போலவே, அந்தந்த மாவட்ட—வட்டச் செயலாளர்களுக்கும் தோ்தல் முடிவு கிளைத் தேர்விக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

'அறிவகம்' சென்னை-13 4—5—68 } —தலைமைக் கழகம் (நி.மு.க.)

சென்னை 4-வது வட்ட

தோழர்கட்கு:

"சென்னை 4-வது வட்ட தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர்களை படியல், கிளைக் கழகப் பணிமனையில் (28, கப்பல் போது செடித் தெரு) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. சமூக உறுப்பினர்கள் அனைவரும் வந்து தங்கள் பெயர் இருக்கிறதா எனப் பார்த்துக்கொள்ளவும்"

என வட்டச் செயலாளர் பி கே. மூர்த்தி அறிவிக்கிறார்.

சென்னை 2-வது வட்ட

தோழர்கட்கு:

'சென்னை 2-வது வட்ட தி. மு. க. கிளையின் உறுப்பினர் பட்டியல், மே 3-ம் நாள் முதல் கிளைக் கழகப் பணிமனையில், தோழர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது; சமூகத் தோழர்கள், தங்கள் பெயர் இருக்கிறதா எனப் பார்த்துக்கொள்ளலாம்"

என்று செயலாளர் சே. அரசு அறிவிக்கிறார்.

அறிவிக்கிறார்.

பொதுநலத் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

6 5—68 மாலை 3-30 மணி : மேல் விஷாரம்—ஊராட்சிமன்ற வரவேற்பு ; 4 மணி : மில்லத் வரவேற்பு ; 4-30 மணி : கல்லூரியில் வரவேற்பு ; 5 மணி : முஸ்லிம் பெருமக்கள் வரவேற்பு ; 5-30 மணி : மில்லத் மருத்துவ மனையைப் பார்வையிடல் ; 6-30 மணி : வாலாஜா பேட்டை—நகரன்ற வரவேற்பு ; இரவு 7 மணி : வேலூர்—பொதுமக்கள் வரவேற்பு ; 8 மணி : மேல் விஷாரம்—பொதுமக்கள் வர வேற்பு.

ரூ. 4-லட்சம் செலவாகியும் முயற்சிக்கிறதாம் டில்லி !

புதுடில்லி, மே 4—

கோண்டாரிக்கா நாட்டிலிருந்து டாக்டர் தர்மதேஜாவையும் அவரது மனைவியையும் இந்தியாவுக்குக் கொண்டுவரும் இந்திய அரசின் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறதாம்.

இந்த ஏற்பாடுகளுக்காக இது வரையில் ரூ. 4-இலட்சம் செலவாகியிருக்கிறதாம்.

சென்னையில் நடந்த கொள்ளை

குற்றவாளிகளைப் பிடிக்கத் தீவிர நடவடிக்கை

அவசர ஆலோசனைக்குப் பின் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, மே 8—

"சென்னையில் அண்மையில் நடந்த இரு கொள்ளைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தி தீவிரமாகத் தப்பமுயலும் குற்றவாளிகளை விரைவில் பிரிவு துப்புதியும் துறைக்கும், செங்கற்பட்டு மாவட்டக் காவல் துறையினருக்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது"

என, உள்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் திரு. இரா. நெடுஞ் செழியன் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பேரசிக இன்ஸ்பெக்டர்—நெனரலியும், சென்னைப் போலீஸ் கமிஷனரும் அழைத்து அமைச்சர் அவசர ஆலோசனை நடத்தினார்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இலக்கிடைய எல்லாவகையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக இன்ஸ்பெக்டர்-நெனரல், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வடநாட்டைச் சேர்ந்தவர்கள், இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் இருப்பதாகத் தெரிவதாகவும், கொள்ளையர்களைப் பிடிப்பதில் பஞ்சாப், இராஜஸ்தான், உ.பி. மாநிலங்களச் சேர்ந்த போலீசின் உதவியை சென்னைப் போலீசுத்துறை கோரியுள்ளதாகத் தெரிகிறது.

அலங்குடி தொகுதியில் ஆக்கப் பணி

சட்டமன்ற உறுப்பினர் காட்டும் அக்கறை

28—4—68 அன்று ஆலங்குடித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கே. வி. சுப்பையா, திருவாங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வேப்பங்குடி ஊராட்சியைச் சார்ந்த வடக்கிப்பட்டி, இம்மனம்பட்டி, தேத்தாப்பட்டி ஆகிய கிராமங் களுக்குச் சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

திருவரங்குளம் ஆணையர் பெ. வேலாயுதம், திருவரங்குளம் சரிபனித் தலைவர் அ. பெரியண்ணன் ஆகியவர்கள் உடன் சென்றனர்.

இம்மனம்பட்டி கிராமத்திற்கும்—தேத்தாம்பட்டி கிராமத்திற்கும் இடையே சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டுமெனறு மக்கள் கோரினர்.

மக்களின் வேண்டுகோளுக்கு கிணங்க உடனடியாக சாலை அமைக்கும் வேலை துவக்கப்பட்டது. கிராம மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

திண்டிவனம் நகர தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

திண்டிவனம் நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் 5—5—68 பிற்பகல் 1-மணிக்கு திண்டிவனம் அர்பன் பாங்கி அருகில் உள்ள கட்டிடத்தில்—அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும் ; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகைதர வேண்டுமென கழகச் செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

நிராலிட முன்னேற்றக் கழகத்திற்காக, நிரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடு பதராகவும், அச்சுபவராகவும் கொண்டு அயிலி அச்சகத்தில் (24, ஞர்ஜராயன் பேட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.